# காஞ்சிபுரம் மாநகராட்சி
# கூட்ட எண்.4/2022-2023

**2022-ம் ஆண்டு ஜீன் மாதம் 30-ம் தேதி வியாழக் கிழமை மாலை 5.00 மணிக்கு காஞ்சிபுரம் மாமன்றத்தின் அவசரக் கூட்டம் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி கலந்து ஆலோசித்து முடிவு செய்ய காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா மாளிகையில் கூடும்.**

**அவ்வமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**முன்னிலை**
**திருமதி.மூ. மகாலட்சுமி, பி.இ. எம்.பி.ஏ.,**
**மாமன்ற மேயர்**

<u>31.05.2022 அன்று ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.112</u>

**1.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49 ல் அமைந்துள்ள காமாட்சி அம்மன் அவென்யூ 1, 2, 3 நகர் மற்றும் விரிவாக்க பகுதிகளுக்கு புதிய பகிர்மான குழாய் மற்றும் வால்வுகள் அமைத்து மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியில் இணைப்பு ஏற்படுத்த மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி மேற்கண்ட பகுதிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**ஒத்திவைக்கப்பட்டது.**

**31.05.2022 அன்று ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண். 113**

**2.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49 ல் உள்ள கீழ்கண்ட தெருக்களில் மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படி கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | பாரதிதாசன் நகரில் பூங்கா பழுது பார்த்தல் பணி. | 5.00 |
| 2 | விஷ்ணு நகர் (தேனம்பாக்கம்) பூங்கா பழுது பார்த்தல் பணி. | 5.00 |
| 3 | காலமேகம் தெரு, இளங்கோ வீதி, காக்கைபாடினியார் வீதி, திருமூலர் தெரு, தொல்காப்பியர் வீதி மற்றும் அகத்தியர் வீதிக்கு மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி. | 22.50 |

**அலுவலக குறிப்பு :**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**ஒத்திவைக்கப்பட்டது**

**31.05.2022 அன்று ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.114**

**3.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.50–ல் கீழ்கண்ட பகுதிகளுக்கு மினி பவர் பம்பு வேண்டி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படி கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கண்ணகிபுரம் மகளிர் வளாகம் பகுதியில் மினி பவர் பம்பு அமைத்தல் பணி | 9.50 |
| 2 | ராஜீவ் காந்தி நகர் பகுதியில் மினி பவர் பம்பு அமைத்தல் பணி | 9.50 |

**அலுவலக குறிப்பு :**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**ஒத்திவைக்கப்பட்டது**

**31.05.2022 அன்று ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.115**.

**4.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.50–ல் மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி சர்வோதயா நகர் 1–வது , 2–வது , 3–வது தெருக்கள், தொண்டைமான் நகர் 1 முதல் 4 தெருக்கள், தாண்டவராய நகர் 1–வது, 2–வது 3–வது தெருக்கள், அண்ணா தெரு, இந்திரா நகர் பிரதான சாலை, பாரதியார் தெரு பிரதான சாலை, ராஜீவ் காந்தி நகர், சின்ன ஐயங்குளம் கிராமம் முதலிய பகுதிகளுக்கு மழைநீர் கால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**ஒத்திவைக்கப்பட்டது**

**31.05.2022 அன்று ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.116**.

**5.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.50–ல் அமைந்துள்ள ராஜீவ் காந்தி நகர் மற்றும் அண்ணா தெரு ஆகியவற்றில் மழைநீர் கால்வாய் வேண்டி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**ஒத்திவைக்கப்பட்டது**.

**31.05.2022 அன்று ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.117.**

**6.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.51 ல் அமைந்துள்ள தேனம்பாக்கம், பெரியார் நகர் இணைப்பு சாலை குறுக்கே வேகவதி ஆற்றில் புதியதாக சிறுபாலம் அமைக்க மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**ஒத்திவைக்கப்பட்டது**

**31.05.2022 அன்று ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.118.**

**7.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட காஞ்சிபுரம் சர்வே வார்டு எண்.1 பிளாக் எண் 13 நகரளவு எண் 761 / 1, 3, 762 765/2 – 0.93 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தில் திரு.பி. மோகன், திரு.ஆர். சந்திரசேகரன் திருமதி எம். சுபத்திரா என்பவர்களின் உத்தேச மனைப்பிரிவு வரைப்படத்திற்கு நகர்ஊரமைப்பு துறை உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக் குழுமம் காஞ்சிபுரம் அவர்களின் உத்திரவு ந.க.எண் 263/2020/ காஉதிகு நாள் 30.04.2020 ன் படி நகர் ஊரமைப்பு துறை சுற்றறிக்கையின் அடிப்படையில் பார்வை (2) ல் கண்டுள்ள வரைப்படத்தின் படி தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டு, அவற்றில் உள்ள சாலை, தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் பதிவு செய்து வரப்பெற்றள்ளது மேலும் மேற்படி மனை உட்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ள வரைப்படம் அனுமதிக்கப்பட்டு அனுப்பியுள்ளனர்.

அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசானை எண்.18 ((MA1) நாள்.04.02.2019–ன் படி உத்தேச தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ள வரைப்படத்தில் உள்ள சாலையினை நகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் தார் சாலை அமைக்கப்பட வேண்டும், தார் அமைத்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். மேலும் மேற்படி சாலையில் சிறுபாலம், தெருவிளக்கு வடிகால் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சாலை பகுதியில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு நகராட்சி பொறியாளரின் மேற்பார்வையில் பணிகள் செய்யவும். மேற்படி பணிகள் அனைத்தும் முடித்து அதற்குடைய ஆவண நகல் மற்றும் புகைப்படம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க மனைப்பிரிவு உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி மனைப்பிரிவில் அனுமதி வழங்கப்பட்டுள்ள சாலைக்கான தானப்பத்திரம் ஆவண எண் 4443/2021 ன் படி பத்திரம் பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதை காஞ்சிபுரம் மாநகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள, ஏற்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

நகர் ஊரமைப்பு துறை உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக் குழுமம் காஞ்சிபுரம் அவர்களின் உத்திரவு ந.க.எண் 263/2020/ காஉதிகு நாள் 30.04.2020–ன்படி மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

(ந.க.எண்.09469/2020/எப்1)

**தீர்மான எண். 265 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**8.** ஆணையர் அவர்களின் மே–2022 மாத நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.165/2021/சி1)

**தீர்மான எண். 266 பதிவு செய்யப்பட்டது.**

**9.** மாநகராட்சியின் மே–2022 ஆம் மாத பிறப்பு, இறப்பு பதிவு செய்த விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | **ஆண்** | **பெண்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| **பிறப்பு** | **67** | **50** | **117** |
| **இறப்பு** | **85** | **59** | **144** |

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.3675/2022/எச்3)

**தீர்மான எண். 267 பதிவு செய்யப்பட்டது.**

**10.** இம்மாநகராட்சிக்கு திருப்பாற் கடல் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து, குடிநீர் பெறப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் பிரதான குழாய் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான களத்தூர் – சங்கரம்பாடி – கிளார் சாலை வழியாக மாநகராட்சி பகுதிக்கு வருகிறது. மேற்படி பிரதான குழாய் அமைக்கப்பட்டு 30 ஆண்டு காலத்திற்கு மேல்ஆகிவிட்டபடியால், குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை உடனுக்குடன் பழுதுநீக்க வேண்டியுள்ளதால், நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலைகளில் சாலை துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து சீரமைப்புக்கான கட்டணமாக ரூ.13.90 இலட்சம் செலுத்துமாறு உதவி கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலைத் துறை கேட்டுகொண்டதன்பேரில் மேற்படி தொகையினை செலுத்திட மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :–**

பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 268 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**11.** காஞ்சிபுரம் மாநகராட்சி 36.14 ச.கி.மீ. பரப்பளவு கொண்ட 51 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இம்மாநகராட்சியில் 2011 ஆம் ஆண்டு கணக்கின்படி மக்கள் தொகை 2,32,816 ஆகும். தற்போதைய மக்கள் தொகை (2022 ஆம் ஆண்டு) 2,72,360 ஆகும். இந்நகரம் கோவில் நகரமாகவும், பட்டு வளர்ச்சி மிகுந்தநகரமாகவும் இருப்பதால் தினந்தோறும் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகள் சராசரியாக 30000 க்கும் மேற்பட்டோர் தினமும் வந்து செல்கின்றனர்.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் மொத்தமுள்ள 51 வார்டுகளில் 41 வார்டுகளுக்கு மட்டுமே தற்போது புதைவடிகால் வசதி அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளில் செப்டிக் டேங்க் வசதியுடன், கழிவுநீர் லாரிகள் மூலம் கழிவுநீர் அகற்றப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொண்டு வந்து வெளியேற்றப்படுகிறது. மேலும் ஏற்கனவே நகரப்பகுதிகளில் செயல்பாட்டில் உள்ள புதைவடிகால் வசதியில் பல்வேறு இடங்களில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் கசிவு ஏற்படுகிறது. நகரப்பகுதிகளில் ஆழ்துளை நுழைவாயில்கள் 30 மீ இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளதால் இவற்றில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்வதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. நத்தப்பேட்டை பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் WSP முறையில் அமைக்கப்பட்டிருப்பதின் மூலம் செயல்திறன் குறைந்து காணப்படுகிறது. இதனால் கழிவுநீர் சுத்திகரிப்பு பணியில் பின்னடைவு ஏற்படுவதுடன் அருகாமையில் உள்ள நத்தப்பேட்டை ஏரியில் கழிவுநீர் கலப்பது குறித்து தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் வழக்கு ஒன்றும் நிலுவையில் உள்ளது. இந்நகரின் மையப்பகுதியில் செல்லும் மஞ்சள்நீர் கால்வாய் பல்வேறு கழிவுநீர் கலப்பு காரணமாக மாசடைந்து காணப்படுகிறது. எனவே இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு புதைவடிகால் வசதியினை ஏற்படுத்தவும், நகரில் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள புதைவடிகால் வசதியினை மேம்படுத்தவும், கழிவுநீரேற்று நிலையங்கள், மோட்டார்கள், குழாய்கள் மற்றும் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் முதலியவை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள புதிய திட்ட மதிப்பீட்டு பிரேரணை தயார் செய்ய தனியார் ஆலோசகர் (Consultancy) நியமனம் செய்ய விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்<br>வ.எண்** | **பணியின் பெயர்** | **நிறுவனத்தின் பெயர்** | **திட்ட மதிப்பீடு தொகை.** |
|---|---|---|---|
| 1 | புதைவடிகால் வசதியினை மேம்படுத்துதல், கழிவுநீரேற்று நிலையங்கள், மோட்டார்கள், குழாய்கள் மற்றும் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் முதலியவை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள தனியார் ஆலோசகர் (Consultancy) நியமனம் செய்தல் பணி | M/s.SSG Engineering, Chennai. | 1.50% |
| | | M/s.ECT Infra Solutions Pvt. Ltd., Chennai. | 1.61% |
| | | M/s.Imayam Creators, Nagapattinam. | 1.71% |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் தெரிவித்துள்ள M/s.SSG Engineering, Chennai அவர்களுக்கு உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1002/2022/இ1)

**தீர்மான எண். 269 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**12.** காஞ்சிபுரம் மாநகராட்சி 36.14 ச.கி.மீ பரப்பளவு கொண்ட 51 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இம்மாநகராட்சியில் 2011 ஆம் ஆண்டு கணக்கின்படி மக்கள் தொகை 2,32,816 ஆகும். தற்போதைய மக்கள் தொகை (2022 ஆம் ஆண்டு) 2,72,360 ஆகும். இந்நகரம் கோவில் நகரமாகவும், பட்டு வளர்ச்சி மிகுந்தநகரமாகவும் இருப்பதால் தினந்தோறும் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகள் சராசரியாக 30000 க்கும் மேற்பட்டோர் தினமும் வந்து செல்கின்றனர்.

இம்மாநகராட்சிக்கு திருப்பாற்கடல் மற்றும் ஓரிக்கை ஆகிய இரண்டு பாலாற்று படுக்கையிலிருந்து 9 MLD குடிநீரும் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்களுடன் சேர்த்து தினந்தோறும் 20.72 MLD குடிநீர் பெறப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 89.00 LPCD குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் 2011 ஆம் ஆண்டு இம்மாநகராட்சி, நகராட்சியாக இருந்தபோது இதனுடன் ஓரிக்கை, தேனம்பாக்கம், செவிலிமேடு மற்றும் நத்தப்பேட்டை ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டு பெருநகராட்சியாக உருமாற்றம் பெற்றது.

இம்மாநகராட்சி பகுதியில் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்து 30 வருடங்கள் கடந்ததால் இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள குழாய்கள், மேல்நிலைநீர்தேக்க தொட்டிகள், கீழ்நிலை நீர்தேக்க தொட்டிகள், மோட்டார்கள் முதலியவை அடிக்கடி பழுதடைந்து குடிநீர் விநியோகத்திற்கு பெரிதும் பாதிப்பு ஏற்படுவதால், இத்திட்டத்தினை முழுவதுமாக மாற்றி அமைத்து ஏற்கனவே உள்ள குடிநீர் வசதிகளுடன், கூடுதலாக புதிய குடிநீர் தொட்டிகள், குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல், புதிய குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள புதிய திட்ட மதிப்பீட்டு பிரேரணை தயார் செய்ய தனியார் ஆலோசகர் (Consultancy) நியமனம் செய்ய விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு தொகையில் |
|---|---|---|---|
| 1 | புதிய குடிநீர் தொட்டிகள், குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல், புதிய குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தனியார் ஆலோசகர் (Consultancy) நியமனம் செய்தல் பணி. | M/s.SSG Engineering, Chennai. | 1.50% |
| | | M/s.ECT Infra Solutions Pvt. Ltd., Chennai. | 1.61% |
| | | M/s.Imayam Creators, Nagapattinam. | 1.75% |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் தெரிவித்துள்ள M/s.SSG Engineering, Chennai அவர்களுக்கு உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1002/2022/இ1)

**தீர்மான எண். 270 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**13.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் தனியார் மூலம் தெருவிளக்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள காஞ்சிபுரம் நகரமன்ற தீர்மானம் எண்.391, நாள்.25.01.2022 ன்படி M/s.V.K. காண்டிராக்டர்ஸ், சென்னை என்ற தனியார் நிறுவனம் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பணியின் அனுமதி காலம் வரும் 18.06.2022 வுடன் முடிவடையவுள்ளது.

தெருவிளக்கு பராமரிப்பு பணி தொடர்ந்து செய்ய வேண்டிய அவசியம் உள்ளதால் வரும் ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள, நிர்வாக அனுமதி பெற வேண்டி விரிவான பிரேரணையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு அனுமதி எதிர்பாக்கப்படுகிறது. மேற்படி அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, பணி ஆணை வழங்க உத்தேசமாக மூன்று மாத காலமாகும்.

எனவே மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியினை 19.06.2022 முதல் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை ஒப்படைக்கும் காலம் வரை தற்போது தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் M/s.V.K. காண்டிராக்டர்ஸ் நிறுவனத்தினருக்கு, நகரமன்ற தீர்மானம் எண்.297, நாள்.11.12.2020 ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலை விகிதத்திலேயே, பணி நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.6692/2020/இ3)

**தீர்மான எண். 271 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**14.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 ல் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள மாமன்ற உறுப்பினர் அவர்கள் விண்ணப்பம் அளித்துள்ளதன் பேரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | லிங்கப்பன் பாளையத் தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 2.50 |
| 2 | லிங்கப்பன் பாளையத் தெருவில் புதை வடிகால் வசதி மேற்கொள்ளுதல் பணி | 3.00 |
| 3 | வார்டு எண். 12 ல் சாலை பழுதுகள் சீர் செய்யும் பணி மேற்கொள்ளுதல் | 6.00 |

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 272 அனுமதி அளிக்கப்பட்டது.**

**15.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 ல் வ.ஊ.சி தெரு, பல்லவர் மேடு, அருந்ததியர் பாளையம் ஆகிய இடங்களில் சாலை மட்டத்தை விட தாழ்வாக உள்ளதால் சாலை இணைப்பு பகுதிகளை உயர்த்தி தர மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதன்படி மேற்கண்ட பகுதிகளில் சாலை இணைப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.00 /- இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 273 அனுமதி அளிக்கப்பட்டது.**

**16.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 ல் கீழ்கண்ட பகுதிகளில் சிறுமின்விசை பம்பு அமைக்க மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பெரியார் தெரு, கிழக்கு பகுதிக்கு சிறு மின் விசை பம்பு அமைத்தல் பணி | 9.50 |
| 2 | இராஜ மாணிக்கம் தெரு, கிழக்கு பகுதிக்கு சிறு மின் விசை பம்பு அமைத்தல் பணி. | 9.50 |
| 3 | மைலம் மேற்கு பகுதிக்கு சிறு மின் விசை பம்பு அமைத்தல் பணி. | 9.50 |
| 4 | மைலம் - மண்டபம் தெரு மேற்கு பகுதிக்கு சிறு மின் விசை பம்பு அமைத்தல் பணி. | 9.50 |

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 274 அனுமதி அளிக்கப்பட்டது.**

**17.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 ல் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஒக்கபிறந்தான் குளம் புதுத் தெரு பகுதியில் சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி | 9.50 |
| 2 | தானப்பன் தெருவில் சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி | 9.50 |
| 3 | ஒக்கபிறந்தான் குளம் அங்கன்வாடி கட்டிடம் மராமத்து பணி மேற்கொள்ளுதல் | 3.00 |
| 4 | வார்டு எண்.16-ல் சாலை பழுது பணிகள் மேற்கொள்ளுதல் பணி. | 5.00 |

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 275 அனுமதி அளிக்கப்பட்டது.**

**18.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34 ல் காந்தி ரோட்டில் வழக்கறுத்தீஸ்வரர் கோயில் பகுதியில் அமைந்துள்ள மழைநீர் கால்வாய் மண் சகதிகள் அடைத்து, கழிவுநீர் வெளியேறுவதால் மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்பேரில் பணி மேற்கண்ட பகுதியில் மழைநீர் கால்வாய் தூர்வாரும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 276 அனுமதி அளிக்கப்பட்டது.**

**19.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34 ல் ஆடிசன் பேட்டை (செட்டி தெருவில்) ஆழ்துளை கிணறு வேண்டி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 277 அனுமதி அளிக்கப்பட்டது.**

**20.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34 ல் உள்ள பள்ளி கூடத்தான் தெரு நடுநிலைப்பள்ளியில், பள்ளி சீரமைப்பு பணிகள் மற்றும் போர்வெல் பழுது பணிகள் முதலியவை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.50 இலட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 278 அனுமதி அளிக்கப்பட்டது.**

**21.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34 ல் அமைந்துள்ள காந்தி ரோடு இராஜாஜி காய்கறி சந்தை சந்திப்பு முதல் ராஜாம்பேட்டை சந்திப்பு வரை அமைந்துள்ள மழைநீர் கால்வாயில் மண் சகதிகள் தேங்கி உள்ளதால் மழைநீர் தேங்கி வெளியேற இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட மழைநீர் கால்வாயை சுத்தம் செய்து மேல்மூடி அமைக்க வேண்டி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 279 அனுமதி அளிக்கப்பட்டது.**

**22.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34, ல் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வள்ளல் பச்சையப்பன் தெரு, குட்டைமேடு பகுதியில் புதைவடிகால் தொட்டி மற்றும் ஆள் நுழைவு வாயில் அமைத்தல் பணி | 5.00 |
| 2 | ஆடிசன் பேட்டை (செட்டி தெருவில்) சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி | 9.50 |

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 280 அனுமதி அளிக்கப்பட்டது.**

**23.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் மாமன்ற கூட்டத்தில் வைக்கப்படும் பொருட்கள் மற்றும் மன்றத்தின் அனுமதிகளின் விவரங்களை பொது மக்களோ அல்லது விருப்பமுள்ளவர்கள் / பிற துறை நிறுவனங்கள் மன்ற தீர்மான நிறைவேற்றங்களை பொருள் வாரியாக அறிவதற்கு தீர்மானங்கள் வாரியாக அவர்களுக்கு நகல் வழங்குவதற்கு தீர்மானம் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் கட்டணம் நிர்ணயம் செய்ய மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.2926/2022/சி2)

**தீர்மான எண். 281 அனுமதி அளிக்கப்பட்டது.**

**24.** காஞ்சிபுரம் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் People's Movement for Clean Cities Campaign தொடர்பாக மெகா தூய்மை பணிகளும், விழிப்புணர்வு பணிகளும் மாதத்தின் 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளில் மேற்கொள்ளவும் பொது மக்களிடையே Behavioral Change ஏற்படுத்தவும் நகரினை தூய்மைப்படுத்தவும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமை செயலாளர், அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் 28.05.2022 அன்று தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக, இம்மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம், பூங்காக்கள், வழிப்பாட்டு தலங்கள், இரயில் நிலையங்கள் போன்ற பொது இடங்களில் உள்ளாட்சி பிரதிநிதிகள் மேற் சொன்ன அமைப்புகளை கொண்டு கூட்டுத் தூய்மை பணி மேற்கொள்ளவும் பொதுமக்களிடம் Behavioral Change ஏற்படுத்தவும் மேற்கண்ட தூய்மை பணிகளை ஆவணப்படுத்தவும் மேலும் இப்பணிகளை மேற்கொள்ள பிளீச்சிங் பவுடர் இருப்பு குறைவாக உள்ளதாலும் பணியின் அவசரம் அவசியத்தை கருதி பிளீச்சிங் பவுடர் வாங்கி வழங்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான பட்டியல் தொகைகள் பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தோராய தொகை | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | மாநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக உபயோகப்படுத்தப்படும் பிளீச்சிங் பவுடர் | ரூ. 5.00 இலட்சம் | Sriperumbadhur Stationery & Allied Products Producer's Industrial Co-Operative Society Ltd., Kancheepuram. |

**அலுவலகக் குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.4905/2022/எச்1)

**தீர்மான எண். 282 பதிவு செய்யப்பட்டது.**

**25.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதியின் கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 20.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | வருவாய் நிதி | | | கூடுதல் | குறைவு |
| 1 | அரசு மருத்துவ மனை வளாகம் மற்றும் விளக்கடி கோயில் தெரு ஆகிய இரு அம்மா உணவகங்களின் 2022-2023-ம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 4.00 | K. Arumugam | | 0.15% |
| | | | Ekkadu Agro | 3.63% | |
| 2 | 2022-2023-ஆம் ஆண்டிற்கு தேவையான குளோரின் கரைசல் (Sodium Hypochloride) சப்ளை செய்திடும் பணி. | 5.30 | A. Aravindan | | 0.98% |
| | | | Ekkadu Agro | 1.31% | |
| | **குடிநீர் வடிகால் நிதி** | | | | |
| 3 | வார்டு எண்.11 ஏகாம்பரநாதர் சன்னதி தெரு மற்றும் விஜயகிராமணி நகராட்சி பள்ளி அருகாமையில் உள்ள ஆழ்துளை கிணற்றினை Flushing செய்து, புதியதாக மின்மோட்டார் மற்றும் இதர பொருட்கள் கொண்டு ஆழ்துளை கிணற்றினை சீரமைத்து புதுப்பிக்கும் பணி. | 1.25 | A. Aravindan | | 0.47% |
| | | | Ekkadu Agro | 1.73% | |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.314/2022/இ1)

**தீர்மான எண். 283 அனமதி அளிக்கப்பட்டது.**

**26.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் 2022 வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி, மாநகராட்சி பகுதிகளில் வெள்ள பாதிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச மதிப்பீட்டு தொகைக்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | திருப்பருத்திக்குன்றம் சாலையில் உள்ள கால்வாய் மற்றும் இரட்டை கால்வாயினை தூர்வாரி சுத்தம் செய்தல் (மாநகராட்சி எல்லை ஆரம்பம் முதல் வந்தவாசி சாலை வரை, அருணாச்சலம் நகர் முதல் ஓரிக்கை ஏரி வரை) | 5.00 |
| 2 | மஞ்சள் நீர் கால்வாயினை தூர்வாரி சுத்தம் செய்தல் (மாநகராட்சி எல்லை ஆரம்பம் முதல் நத்தப்பேட்டை ஏரி வரை) | 7.00 |
| 3 | தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை அப்புறப்படுத்த மணல் மூட்டைகள், மரம் அறுக்கும் இயந்திரங்கள், கயிறு, டார்ச் லைட்கள், மண் வெட்டிகள் மற்றும் சவுக்கு மரங்கள் சப்ளை செய்தல். | 2.00 |
| 4 | வார்டு எண்.1 முதல் 13, 48 முதல் 51 வரை டீசல் இன்ஜீன்கள், ஜே.சி.பி. மற்றும் ஜெனரேட்டர்கள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல். | 9.00 |
| 5 | வார்டு எண்.14 முதல் 20, 29 முதல் 34 வரை, 42, 45, 46 மற்றும் 47 வரை டீசல் இன்ஜீன்கள், ஜே.சி.பி. மற்றும் ஜெனரேட்டர்கள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல். | 9.00 |
| 6 | வார்டு எண்.21 முதல் 28, 35 முதல் 41 வரை, 43 மற்றும் 44 வரை டீசல் இன்ஜீன்கள், ஜே.சி.பி. மற்றும் ஜெனரேட்டர்கள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல். | 9.00 |
| 7 | வார்டு எண்.1 முதல் 13, 48 முதல் 51 வரை உள்ள வார்டுகளில் மழை வெள்ளதால் சேதமடையும் சாலைகளுக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.00 |
| 8 | வார்டு எண்.14 முதல் 20, 29 முதல் 34 வரை, 42, 45, 46 மற்றும் 47 வரை உள்ள வார்டுகளில் மழை வெள்ளத்தால் சேதமடையும் சாலைகளுக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.00 |
| 9 | வார்டு எண். 21 முதல் 28, 35 முதல் 41 வரை, 43 மற்றும் 44 வரை உள்ள வார்டுகளில் மழை வெள்ளத்தால் சேதமடையும் சாலைகளும் சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.00 |
| 10 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட ஓரிக்கை மற்றும் தேனம்பாக்கம் பகுதியில் பொக்லைன் இயந்திரம் கொண்டு மண் சகதிகளை அகற்றும் பணி. | 9.00 |

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.4831/2022/இ1)

**ஒத்திவைக்கப்பட்டது**

**27.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு 1 முதல் 51 வரையிலான பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்கும் விதமாக பணிகளை மேற்கொள்ள தேவையான 200 எண்ணிக்கையிலான பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 2019–2020 ஆம் ஆண்டிற்கு தினக்கூலி அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.342/– வீதம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பணிகளை மேற்கொள்ள தற்காலிகமாக பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டது. மேலும் சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் மாநகர் நல அலுவலர் (பொ) அவர்களின் குறிப்பில் எதிர்வரும் கொரோனா தடுப்பு பணிகள் அவசியமானதாக உள்ளதால் பணியின் அவசரம் அவசியம் கருதி 200 தற்காலிக பணியாளர்களை மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் தேர்வு செய்து பணி மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சியர், அவர்களது 2019–2020 ஆம் ஆண்டு விலை விகிதம் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.342/– வீதம் வழங்கவும் மார்ச் 31, 2022 முதல் 89 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.60.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு அவர்களது மாதாந்திர மதிப்பூதியம் அவரவர் சொந்த வங்கி கணக்கில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.5220/2016/எச்1)

**தீர்மான எண். 284 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**28.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் பயன்பாட்டில் உள்ள கீழ்கண்ட வாகனங்களை அதன் பராமரிப்பு நிறுவனமான திருவாளர் காம் அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட்., புனே நிறுவனம் இந்நகரமன்ற தீர்மான எண்.435 நாள்.31.01.2012 ன்படி கீழ்க்கண்ட விலை விகிதத்தில் (வாகனம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஆகும் எரிபொருள், வாகன ஓட்டுநர், ஆபரேட்டர். கூலி மற்றும் பராமரிப்பு செலவுகள் உட்பட) பராமரிக்கப்பட்டு வந்தது.

| | | |
|---|---|---|
| TN 21 AM 3216 | - | Mini Compactor |
| TN 21 AM 3292 | - | Mini Compactor |
| TN 21 AM 3294 | - | Big Compactor |
| TN 21 BC 3727 | - | Mini Compactor |
| TN 21 BC 3749 | - | Mini Compactor |
| TN 21 BC 3261 | - | Mini Compactor |
| TN 21 BC 3290 | - | Mini Compactor |
| TN 21 AM 8082 | - | Hook Loader |

தற்போது மேற்படி வாகனங்களின் பராமரிப்பு காலம் நகரமன்ற தீர்மான எண். 386. நாள். 25.01.2022 ன்படி அன்றுடன் முடிவடைகிறது. எனவே இவ்வாகனத்தை இயக்க மாநகராட்சியில் போதிய ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் பொது சுகாதாரப் பணிகள் தடையில்லாமல் நடைபெறவும் அவசர அவசியம், கருதி ஏற்கனவே பராமரித்து இயக்கி வரும்

நிறுவனமான திருவாளர் காம் அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட்., புனே என்ற நிறுவனத்தால் மேலும் 10.06.2022 முதல் 07.09.2022 வரை ஏற்கனவே இயக்கி பராமரிக்கும் விலை வீதத்திலேயே மீண்டும் இயக்கி பராமரிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ. 24.75 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை ஏற்கனவே பராமரித்து வரும் நிறுவனமான திருவாளர் காம் அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட்., புனே, நிறுவனத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்த விலை விகிதத்தின் அடிப்படையில் பணியை ஒப்படைப்பதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. இப்பணிக்காகும் தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.9316/2021/எச்1)

**தீர்மான எண். 285 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**29.** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் கடித எண்.20543 /2022/தி2–1 நாள்.19.04.2022–ல் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022–23 –ல் மாநகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்கள் மேம்படுத்தும் பணிகள் சம்மந்தமாக திட்ட அறிக்கை அனுப்ப கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.42–ல் உள்ள சோமசுந்தரம் நகர் பூங்கா மேம்படுத்தும் பணி | 75.00 |
| 2 | வார்டு எண்.41–ல் உள்ள எஸ்.எம்.ஜி நகர் பூங்கா மேம்படுத்தும் பணி | 100.00 |
| 3 | வார்டு எண்.41–ல் உள்ள எஸ்.எம்.ஜி நகர் (விசாலட்சி நகர்) பூங்கா மேம்படுத்தும் பணி. | 100.00 |
| 4 | வார்டு எண்.25–ல் உள்ள திருவேங்கடம் நகர் பூங்கா மேம்படுத்தும் பணி | 50.00 |
| 5 | வார்டு எண்.26–ல் உள்ள சுதர்சன் நகர் (திருவண்ணாமலை நகர்) பூங்கா மேம்படுத்தும் பணி. | 50.00 |
| 6 | வார்டு எண்.19–ல் உள்ள கந்தன் நகர் பூங்கா மேம்படுத்தும் பணி | 100.00 |
| 7 | வார்டு எண்.47–ல் உள்ளபேராசிரியர் நகர் பூங்கா மேம்படுத்தும் பணி | 25.00 |
| 8 | வார்டு எண்.45–ல் உள்ள பாக்கியலட்சுமி நகர் பூங்கா மேம்படுத்தும் பணி | 25.00 |
| 9 | வார்டு எண்.49–ல் உள்ள பாரதிதாசன் நகர் பூங்கா மேம்படுத்தும் பணி | 35.00 |
| | **மொத்தம்** | **560.00** |

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. அரசு நிதியின் கீழ் பணி மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.3464/2022/இ1)

**ஒத்திவைக்கப்பட்டது**

**30.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0(SBM 2.0) 2022–23 –ன் கீழ் மேற்கொள்ள இருக்கும் பணிக்கு 19.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி/ M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | தூய்மை இந்திய திட்டம் 2.0 ன் படி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு பரப்புரையாளர்கள் – 25, மேற்பார்வையாளர் – 4, ஒருங்கிணைப்பாளர் – 1, ஆகிய பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் வழங்குதல். | 63.40 | M/S. Sankar Labour Contract. | மதிப்பீட்டு தொகைக்கு | – |
| | | | M/S. Paramount Hospitility Service. | – | 0.03% |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/S. Paramount Hospitility Service மதுரை நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.3177/2022/எச்4)

**தீர்மான எண். 286 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**31.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15வது மான்ய நிதி 2020–2021 & 2021–2022 ன் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள 22.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| | **2020–21** | | | | |
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு களத்தூர் கிராமம் உள்நுழைவாயிலிருந்து (OHT) கி.மீ. கல் எண்–6 (2/6) வரை 600 மி.மீ DI S/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி. (சிப்பம் 1) | 50.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 11.14% | |
| 2 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு களத்தூர் கிராமம் கி.மீ. கல் எண். – 6(2/6) லிருந்து களத்தூர் கால்நடை மருத்துவனை வரை 600 மி.மீ. DI S/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி. (சிப்பம் II) | 50.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 10.03% | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு களத்தூர் கிராமம் கால்நடை மருத்துவனை முதல் இராஜா முதலியார் அறிவியல் பரிசோதனை கூடம் வரை 600 மி.மீ DI S/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி. (சிப்பம் II) | 50.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.97% | |
| | | | R.பாபு | 10.04% | |
| 4 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு இராஜா முதலியார் அறிவியல் பரிசோதனை கூடம் முதல் அம்பேத்கர் பெயர் பலகை வரை 600 மி.மீ. DI S/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி. (சிப்பம் IV) | 50.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 8.78% | |
| 5 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு அம்பேத்கர் பெயர் பலகை முதல் பஜனை கோயில் தெரு வரை 600 மி.மீ. DI S/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி. (சிப்பம் V) | 50.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 9.93% | |
| 6 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு பஜனை கோயில் தெரு முதல் பொதுகழிப்பிடம் வரை 600 மி.மீ DI S/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி. (சிப்பம் VI) | 50.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 12.99% | |
| 7 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு களத்தூர் பொது கழிப்பிடம் முதல் சங்கரம்பாடி மின்தேக்கி (Transformer) வரை 600 மி.மீ DI S/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி. (சிப்பம் VII) | 55.00 | N.P.G.பிரதர்ஸ் | 5.00% | |
| | | | R.பாபு | 14.97% | |
| 8 | வெள்ளைக்குளம் பகுதியில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணி (3TPD) | 50.00 | S.தேவராஜன் | 6.75% | |
| | | | S.ரங்கநாதன் | 4.98% | |
| 9 | வெங்கடாவரம் பகுதியில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணி. (3TPD) | 50.00 | G.இலட்சுமி | 4.94% | |
| | | | V.புகழேந்தி | 7.52% | |
| 10 | செவிலிமேடு பகுதியில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணி. (3TPD) | 50.00 | E.வெங்கடேசன் | 4.94% | |
| | | | பஞ்சுபன்னீர் செல்வம் | 7.50% | |
| 11 | இராஜாஜி மார்கெட் பகுதியில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணி. (3TPD) | 50.00 | E.வெங்கடேசன் | 7.99% | |
| | | | பஞ்சுபன்னீர் செல்வம் | 4.49% | |
| 12 | ஓரிக்கை பகுதியில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணி. (3TPD) | 50.00 | G.இலட்சுமி | 7.52% | |
| | | | V.புகழேந்தி | 4.94% | |
| 13 | வார்டு எண்.9, நகரீஸ்வரர் கோயில் தெரு முதல் வைகுண்டம் தெரு வரை சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. (Unicode:008009R110, 008009R122, 008009R108, 008009R115) | 35.00 | M.சேகர் | 6.97% | |
| | | | A.செல்வகுமார் | 4.97% | |
| 14 | வார்டு எண்.49, செல்வ விநாயகர் கோயில் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி. (Unicode:008049R1790) | 30.00 | N.P.G.பிரதர்ஸ் | 13.32% | |
| | | | N. நடராஜன் | 4.99% | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **2021–22** | | | | |
| 1 | வார்டு எண்.45 ல் உள்ள பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி வரை 2460 மீ நீளம் குடிநீர் வழங்கும் 100 மி.மீ DI பிரதான குழாய் மற்றும் 1500 மீ நீளம் கேபிள்களை மாற்றியமைக்கும் பணி. (சிப்பம் I) | 98.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 11.01% | |
| 2 | வார்டு எண்.46 ல் உள்ள பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி வரை 2460 மீ நீளம் குடிநீர் வழங்கும் 100 மி.மீ DI பிரதான குழாய் மற்றும் 1500 மீ நீளம் கேபிள்களை மாற்றியமைக்கும் பணி. (சிப்பம்II ) | 97.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 10.37% | |
| 3 | வார்டு எண்.47 மற்றும் 49 ல் உள்ள பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி வரை 2340 மீ நீளம் குடிநீர் வழங்கும் 100 மி.மீ DI பிரதான குழாய் மற்றும் 1500 மீ நீளம் கேபிள்களை மாற்றியமைக்கும் பணி. (சிப்பம் III) | 94.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 13.12% | |
| 4 | வார்டு எண்.50, செவிலிமேடு பகுதியில் நுண்ணூச் செயலாக்க மையம் அமைக்கும் பணி. | 43.00 | S.ரங்கநாதன் | 5.78% | |
| | | | S.தேவராஜ் | 4.92% | |
| 5 | வார்டு எண்.45, தேனம்பாக்கம் பகுதியில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணி. | 42.00 | S.தேவராஜ் | 7.00% | |
| | | | VTN Groups | 4.95% | |
| 6 | வார்டு எண். 45–ல் உள்ள பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி வரை குடிநீர் வழங்கும் பிரதான குழாய் மற்றும் கேபிள்களை மாற்றியமைக்கும் பணி (சிப்பம் IV) | 80.00 | K.ஆறுமுகம் | 7.00% | |
| | | | VTN Groups | 4.95% | |
| 7 | வார்டு எண்.45–ல் உள்ள பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி வரை குடிநீர் வழங்கும் பிரதான குழாய் மற்றும் கேபிள்களை மாற்றியமைக்கும் பணி (சிப்பம் V) | 80.00 | K.ஆறுமுகம் | 7.00% | |
| | | | VTN Groups | 4.95% | |
| 8 | வார்டு எண்.45–ல் உள்ள பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராடசிக்குட்பட்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி வரை குடிநீர் வழங்கும் பிரதான குழாய் மற்றும் கேபிள்களை மாற்றியமைக்கும் பணி (சிப்பம் VI) | 40.00 | இளங்கோ எலட்ரிக்கல் ஒர்க்ஸ் | 4.90% | |
| | | | K.கார்த்திகேயன் | 9.11% | |
| 9 | வார்டு எண்.50, செவிலிமேடு பாலாற்றில் 5.45 மீ விட்டம் மற்றும் 10.30 ஆழம் கொண்ட புதிய நீர் ஊடுருவல் கிணறு 110 மி.மீ. U–PVC பம்பிங் மெயின் 650 மீ கேபிள் மற்றும் மோட்டார் அமைக்கும் பணி. | 48.00 | N.P.G.பிரதர்ஸ் | 4.99% | |
| | | | R.பாபு | 10.21% | |

அலுவலக குறிப்பு :–

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.13359/2021/இ1)**

**தீர்மான எண். 287 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**32.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் ஏகாம்பரநாதர் மற்றும் வரதராஜர் பெருமாள் கோயில் திருவிழாவினை முன்னிட்டு பணியின் அவசர அவசியம் கருதி பட்டியலில் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததால் கீழ்குறிப்பிட்டுள்ள இப்பணிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்ட விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.17, வணிகர் வீதி, இராஜகோபால் பூபதி தெரு, பத்திரகாளியம்மன் கோயில் தெரு, வார்டு எண்.16, நரசிங்கராயர் தெரு மற்றும் இராமசாமி தெரு, வார்டு எண்.37 ஆகிய இடங்களில் உள்ள சாலை பழுதுகளை சீரமைத்தல் | 8.80 | P. விஜயரகுநாதன் |
| 2 | வார்டு எண்.25, வடக்கு மாட வீதி தெரு, வார்டு எண்.30, புண்ணிய கோட்டீஸ்வரர் கோயில் மாட வீதி மற்றும் வார்டு எண்.34, காந்தி ரோடு ஆகிய இடங்களில் உள்ள சாலை பழுதுகளை சீரமைத்தல் | 5.60 | V. பார்த்திபன் |
| 3 | வார்டு எண்.13, கிருஷ்ணன் தெரு, வார்டு எண்.37, தாயார் குளம் பிரதான சாலை மற்றும் வார்டு எண்.33, விளக்கடி கோயில் தெரு பிரதான ரோடு ஆகிய இடங்களில் உள்ள சாலை பழுதுகளை சீரமைத்தல் | 7.10 | P. விஜயரகுநாதன் |
| 4 | வார்டு எண்.29 ல் அமைந்துள்ள ஆணைகட்டி தெரு மற்றும் வார்டு எண்.25 ல் அமைந்துள்ள வேதாசலம் தெரு ஆகிய இடங்களில் உள்ள சாலை பழுதுகளை சீரமைத்தல் | 9.40 | K. பாண்டியன் |
| 5 | வார்டு எண்.37, மடம் தெரு, வார்டு எண்.15 ல் அமைந்துள்ள மாண்டுகனீஸ்வரர் கோயில் தெரு, வார்டு எண்.14 ல் மண்டபம் தெரு ஆகிய இடங்களில் உள்ள சாலை பழுதுகளை சீரமைத்தல் | 6.90 | K. பாண்டியன் |
| 6 | வார்டு எண்.9, பானக்கார தெரு, திருப்புக்கூடல் தெரு, உப்பேரி குளம் தெரு ஆகிய இடங்களில் உள்ள சாலை பழுதுகளை சீரமைத்தல் | 9.00 | V. பார்த்திபன் |
| 7 | வார்டு எண்.9, ஒத்தவாடைத் தெரு, நிமிர்ந்த கார தெரு, ஏ.ஊ பரமசிவம் தெரு, பாண்டவ பெருமாள் கோயில் தெரு, சாத்தான் குட்டை தெரு ஆகிய இடங்களில் உள்ள சாலை பழுதுகளை சீரமைத்தல் | 9.00 | V. பார்த்திபன் |

அலுவலக குறிப்பு :-

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 288 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

"

**33.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் உள்ள "கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரில் சுத்திகரிக்கப்பட்ட நீரின் தன்மையை தொடர்ச்சியாக கண்காணிக்கும் அமைப்பு (Online Continuous Effluent Monitoring Systems) ஏற்படுத்தும் பணிக்கு மூலதான மானிய நிதி (CGF) 2021–22 திட்டத்தின் கீழ் ரூ.41.72 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள 25.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1. M/s.RL Technologies Pvt Ltd,No.2, Factory Road, Athur, Chengalpattu – 603 101.
2. M/s.Swaraj Equipment Pvt. Ltd, No.53, Annaji Rao Nagar, Vembuliamman koil street, West KK Nagar, Chennai – 600 078.

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு (Technical Evaluvation) செய்ததில் M/s.RL Technologies Pvt Ltd, அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளன. M/s.Swaraj Equipment Pvt. Ltd நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் தகுதி பெறவில்லை. எனவே கீழ்கண்ட விவரப்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு தொகைக்கு கூடுதல் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s.RL Technologies Pvt Ltd, No.2, Factory Road, Athur, Chengalpattu – 603 101. | 4.98 சதவிகிதம் கூடுதல் |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.RL Technologies Pvt Ltd, அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலைவிகிதம் மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாக உள்ளதை ஏற்று மன்றம் அளிக்கலாம்.

**(ந.க.எண். 12993/2021/இ1)**

**தீர்மான எண். 289 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**34.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பிரதான புதைவடிகால் பைப் மற்றும் ஆள்நுழைவு வாயில்கள் ஆகியவற்றில் தேங்கும் கசடுகளை ரோபாடிக் இயந்திரம் கொண்டு அகற்றும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் (மதிப்பீடு ரூ.) |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிரதான புதைவடிகால் பைப் லைன் மற்றும் ஆள்நுழைவு வாயில்கள் ஆகியவற்றில் தேங்கும் கசடுகளை ரோபாடிக் இயந்திரம் கொண்டு அகற்றவும், போக்குவரத்து செலவு பணியாளர் ஊதியம் உட்பட 15 தினங்களுக்கு பணி. | M/s. Genrobotic Innovations Pvt. Ltd., Thiruvanathapuram. | 1,80,000/– |
| | | M/s. Irov Technologies Pvt. Ltd., Ernakulam, Kerala, | 2, 25,000/– |

**அலுவலக குறிப்பு :–**

1. மேயர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Genrobotic Innovations Pvt. Ltd., Thiruvanathapuram அவர்களுக்கு உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1002/2022/இ1)

**தீர்மான எண். 290 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**35.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் 2012–13 பகுதி – 2 திட்டத்தின் கீழ் ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் தாயார் குளம் பகுதியில் எரிமேடை அமைக்கும் பணி திருவாளர் ஜெனரல் என்விரோ டெக் பி.லிட். அவர்கள் மூலம் செய்து முடிக்கப்பட்டு உரிய பட்டியல் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியின் போது செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பிணை வைப்புத் தொகைகள் ஆகியவை வழங்கக் கோரி The Regional Micro an Small Enterprises Facilitation Council, Coimbatore நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.P MSEFC/CBER/102/2021 மூலம் வழக்கு தொடர்ந்து 18.11.2021 முதல் பல்வேறு தேதிகளில் வழக்கு நடந்து வந்து 08.06.2022 அன்று இறுதி தீர்ப்பில் அன்னாருக்கு சேர வேண்டிய தொகைகளை மட்டும் வழங்கவும், இதற்கான வட்டித் தொகைகள் வழங்க தேவையில்லை என காணொளி வாயிலாக நடைபெற்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இப்பணி தொடர்புடைய உதவி பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி கீழ்கண்ட விவரப்படி தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த நிறுவனம் | E.M.D Rs. | FSD 1 % | பிணை வைப்புத் தொகை ரூ. (Witheld) |
|---|---|---|---|---|---|
| 1 | 2012–13 பகுதி – 2 திட்டத்தின் கீழ் ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் தாயார் குளம் பகுதியில் எரிமேடை அமைக்கும் பணி. | M/S General Enviro Tech Private Limited. No. 30, Co-operative Colony, Near Park School Arch road,, Upplipalayam, Coimbatore – 641 015 | 65,000/- | 65,000/- | 3,09,880 |
| | | | **மொத்தம் ரூ.** | | **4,39,880** |

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.13341/2021/இ1)

**தீர்மான எண். 291 அனுமதி அளிக்கப்பட்டது.**

**36.** காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட காஞ்சிபுரம் நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்திட சட்டப்பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் 24.08.2021ம் தேதிய அறிவிப்பினை தொடர்ந்து, அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் காணொலி வாயிலான 26.08.2021 அன்றைய ஆய்வுக் கூட்டத்தின் அறிவுரைக்கிணங்க, மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலை தொடர்ந்து காஞ்சிபுரம் நகராட்சி எல்லைப் பகுதியினை சுற்றியுள்ள காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோனேரிக்குப்பம், திருப்பருத்திக்குன்றம், கருப்படிதட்டடை, கீழ்கதிர்பூர், சிறுகாவேரிப்பாக்கம், திம்மசமுத்திரம், கீழம்பி, புத்தேரி ஆகிய 8 கிராம ஊராட்சிகளையும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட களியனூர், வையாவூர் மற்றும் ஏனாத்தூர் ஆகிய 3 கிராம ஊராட்சிகளையும் ஆக மொத்தம் 11 கிராம ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்திட உரிய பிரேரணை அரசுக்கு அனுப்பி மாநகராட்சியாக தரம் உயர்த்த பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டது.

காஞ்சிபுரம் நகரம் 01.11.1866–ல் நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அதன் பின்னர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.651, நாள்.09.05.1983 இல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, மேலும் அரசாணை எண்.238, நாள்.02.12.2008 இன்படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 11.72 ச.கி.மீ. பரப்பளவில் 45 வார்டுகளாக செயல்படுத்தப்பட்டிருந்த நிலையில், அரசாணை(நிலை) எண்.277, நாள்.09.11.2010 இன்படி செவிலிமேடு பேரூராட்சி, ஓரிக்கை, நத்தப்பேட்டை மற்றும் தேனம்பாக்கம் ஊராட்சி பகுதிகளை இந்நகராட்சியுடன் இணைத்ததன் வாயிலாக 36.14 ச.கி.மீ. பரப்பளவில் 51 வார்டுகளைக் கொண்டு பெரு நகராட்சியாக செயல்பட்டு வரும் நகராட்சி பகுதியினை தமிழ்நாடு அவசரச்சட்டம் 2 /2021 நாள்.20.10.2021ன் படி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் எண்.494/21.10.2021–ன்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20779/2021/மா.ந.அ1, நாள்.16.06.2022–ன்படி மாநகராட்சிகளின் அருகில் உள்ள கிராம ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சிகளின் எல்லை விரிவாக்கம் செய்ய ஏதுவாக உரிய மாமன்ற தீர்மானம் இயற்றி பிரேரணையினை அனுப்பி வைக்கக் கோரப்பட்டுள்ளது.

மேலும், காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதியினை சுற்றியுள்ள ஊராட்சிகளை இணைப்பதால் அண்ணா பல்கலைக்கழக கிளை கல்லூரி, பொறியியல் கல்லூரிகள், சங்கரா நிகர்நிலை பல்கலைக்கழகம், அண்ணா புற்றுநோய் மருத்துவமனை, L & T நிறுவனம், AUDCO நிறுவனம், அரிசி ஆலைகள், விசைத்தறி நிறுவனங்கள், சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு வளாகம், தமிழ்நாடு அரசின் பட்டு வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனம் (TANSILK) மற்றும் அடர்ந்த குடியிருப்பு பகுதிகளை உள்ளடக்கியதாக அமைவதால் நகரின் பரப்பளவு 110.87 ச.கி.மீ. கொண்டதாகவும், தற்போதைய மாநகராட்சியின் வருமானம் ரூ.78.66 கோடியிலிருந்து ரூ.82.00 கோடியாக உயரும். எனவே காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோனேரிக்குப்பம், திருப்பருத்திக்குன்றம், கருப்படித்தட்டடை, கீழ்கதிர்பூர், சிறுகாவேரிப்பாக்கம், திம்மசமுத்திரம், கீழம்பி, புத்தேரி ஆகிய 8 கிராம ஊராட்சிகளையும் மற்றும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட களியனூர், வையாவூர் மற்றும் ஏனாத்தூர் ஆகிய 3 கிராம ஊராட்சிகளையும் இணைத்து மாநகராட்சியின் எல்லையினை விரிவாக்கம் செய்ய மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு :–**

1. காஞ்சிபுரம் மாநகராட்சியுடன் 11 கிராம ஊராட்சிகளை இணைப்பதால், எதிர்வரும் காலங்களில் நகராட்சிப் பகுதியில் திட்டங்களை செயல்படுத்த தேவையான இடவசதி கிடைக்கும்.
2. மாநகராட்சியின் வருமானம் ரூ.78.66 கோடியிலிருந்து ரூ.82.00 கோடியாக உயரும்.
3. மாநகராட்சியுடன் இணைக்கும் கிராம ஊராட்சிகளிலுள்ள மக்கள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்திட இயலும்.

(ந.க.எண்.7554/2021/எப்1)

**தீர்மான எண். 292 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**மாநகராட்சி அலுவலகம்,**
**காஞ்சிபுரம்.**
**நாள்.29.06.2022**

**(ஒம்) மூ. மகாலட்சுமி**
**மேயர்**
**காஞ்சிபுரம் மாநகராட்சி.**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**காஞ்சிபுரம் மாநகராட்சி.**